# LOYOLA COLLEGE (AUTONOMOUS), CHENNAI – 600 034

**B.A.**DEGREE EXAMINATION –**TAMIL LITERATURE**

SECOND SEMESTER – **APRIL 2019**

**TL 2502– RELIGIOUS AND ETHICAL LITERATURE**

Date: 12-04-2019 Dept. No. Max. : 100 Marks

Time: 01:00-04:00

**பகுதி - அ** (10 x 2 = 20 மதிப்பெண்கள்)

**விடையொன்றுக்கு 20 சொற்களில் விடையளிக்க.**

01. தேவாரம் பாடியோர் யாவர்?
02. ''கதிக்கு வழிகாட்டுகின்ற கண்ணே'' என வள்ளலார் யாரைக் குறிப்பிடுகிறார்? ஏன்?
03. வைகுண்ட வாசலில் வேங்கடவனைக் காணக் காத்திருந்தோர் யாவர்?
04. குலசேகர ஆழ்வார் - குறிப்பு வரைக.
05. தேம்பாவணி ஏழு வரங்களாகக் கூறுவனவற்றை எழுதுக.
06. ''வேதமே வேதவிளக்கமே விளக்கின் விழுத்தகு ஜோதியே'' என்று யார், யாரை அழைக்கிறார்?
07. குணங்குடியார் வாடிக் கலங்குதவற்குரிய காரணம் யாது?
08. பரிபூரணமாய்ப் பகரும்படி குணங்குடியார் எதனை வேண்டுகிறார்?
09. மக்கட்பண்பு இல்லாதவர் யாவர்?
10. எவை நில்லாது எனச் சிலம்பு கூறுகிறது?

**பகுதி - ஆ** (5 x7 =35 மதிப்பெண்கள்)

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒன்றரைப்பக்க அளவில் விடையளிக்க.**

11. இறைவனின் தன்மைகளாக திருஞானசம்பந்தர் கூறுவனவற்றை எழுதுக.
12. இறைவன் ஆட்கொண்ட விதத்தைச் சுந்தரர் பாடல்கள் வழி நிறுவுக.
13. குலசேகர ஆழ்வார் வித்துவக்கோட்டு அம்மானிடம் வேண்டுவனவற்றை எடுத்துரைக்க.
14. தேம்பாவணியில் கூறப்படும் இத்தாலி நாட்டின் சிறப்பினைக் கூறுக.
15. 'இனியவை கூறல்' அதிகார வழி வள்ளுவர் உணர்த்தும் கருத்துகளை எழுதுக.
16. புதிய ஆத்திசூடியில் பாரதியார் கூறும் மறுமலர்ச்சிச் சிந்தனைகளை எடுத்துரைக்க.
17. சிலம்பில் கூறியுள்ள கருத்துகளை நும் பாடப்பகுதி வழி புலப்படுத்துக.

**பகுதி - இ** (3 x15 =45 மதிப்பெண்கள்)

**மூன்று பக்க அளவில் விடையளிக்க.**

18. இறைவனின் சிறப்புகளாக மாணிக்கவாசகர் கூறுவனவற்றை விளக்குக.

**( அல்லது )**

குலசேகர ஆழ்வார் திருவேங்கட மலையில் வேண்டும் பிறவிகளை விளக்குக.

19. இறைவனின் இயல்புகளாக விச்சிராந்திப் படலம் கூறுவனவற்றைத் தொகுத்துரைக்க.

**( அல்லது )**

குணங்குடியார் பராபரக்கண்ணியில் இறைவனிடம் இறைஞ்சும் வரங்களை எடுத்துரைக்க.

20. ஔவையார் மூதுரையில் கூறியுள்ள அறக் கருத்துகளை விவரிக்க.

**( அல்லது )**

மணிமேகலை மூலம் அறியலாகும் அறநெறிகளை விளக்குக.

★★★★★★★